ARCHBISHOP OF KUALA LUMPUR
USKUP AGUNG KUALA LUMPUR)

528, Jalan Bukit Nanas, 50250 Kuala Lumpur, Malaysia
Tel: 603-2078 8828/ 2078 5089/ 2072 6606 I Fax: 603-2031 3815
archbishop@archkl.org I www.archkl.org

*17 மார்ச் 2020*

# நடமாட்டக் கட்டுப்பாடு ஆணை ஏப்ரல் 14 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு மலேசிய ஆயர்களின் மேய்ப்புப்பணி மடல்.

அருள்பணியாளர்கள், திருநிலைப்படுத்தப்பட்டவர்கள், மற்றும் பொதுநிலையினர்களுக்கு,

உலகம் முழுவதையும் பாதித்து, நம் அன்றாட வாழ்க்கையில் பல இடையூறுகளைக் கொண்டு வந்த இந்த தொற்றுநோய் இறுதியாகக் கட்டுப்படுத்தப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டும் என்று நீங்கள் அனைவரும் கடுமையாக இறைவேண்டல் செய்கிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். போர் ஆரம்பமாகிவிட்டது. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு தனிப்பட்ட நிகழ்வு அல்ல மாறாக அது முழு வாழ்க்கைப் போராட்டம் என்பது போல், இந்த தொற்று நோயின் பரவலைத் தணிக்கவும், மேலும் உயிரிழப்புகளைத் தவிர்க்கவும், நமது சுகாதார கவனிப்பு முறையைக் கடந்துச் செல்லுவதிலிருந்தும் அதைத் தடுக்கவும் நம் பங்கைச் செய்வதில் நாமும் சிப்பாய்களாகத் திகழவேண்டும்.

இந்த சவாலான காலங்களில் உங்களுடனான எங்கள் நெருக்கத்தை உங்கள் மேய்ப்பர்களான நாங்கள் உறுதிப்படுத்த விரும்புகிறோம். பங்குகள், வெவ்வேறு பணிக்குழுக்குழுக்கள் மற்றும் அ.தி.ச-கள் அனைவரும், நம்மைச் சுற்றியுள்ள குறிப்பாக, மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள், அவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்கள் மத்தியில் உடனிருக்க வேண்டுகிறோம். நாங்கள் உங்களை உடல் ரீதியாக ஆறுதல்படுத்த முடியா விட்டாலும், நீங்கள் எங்கள் இதயங்களுக்கு நெருக்கமாக இருக்கிறீர்கள் என்ர்தை தெரிவித்துக்கொள்கிறோம்..

நமது பிரதமர் இன்று அறிவித்தபடி, நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் (MCO) கீழ் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்ட காலமானது *2020* ஏப்ரல் *14* வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த நீட்டிப்பு தவிர்க்க இயலா நிலையில், நமது திருஅவையின் மிகத் தூய திருவழிபாட்டுக் காலமான புனித வாரத்தோடு இணைந்துப்போகிறது.

நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் நீட்டிப்பு மற்றும் பொதுக்கூட்டங்களின் தடைகளின் கீழ், மூன்று பேராயர்கள் மற்றும் மலேசியாவின் ஆறு மறைமாவட்டங்களின் ஆயர்கள், ஏப்ரல் *14, 2020* ஆம் தேதி வரை திருவழிபாட்டு கொண்டாட்டங்கள் புனித வாரம் உட்பட, பல்வேறு மாமறை மாவட்டங்களின் / மறைமாவட்டங்களின் **அருள்பணியாளர்களால் பங்கு மக்கள் இல்லாமல்** நிறைவேற்றப்படும்

திருவழிபாட்டுக்கான திருபீட மன்றம் மற்றும் *2020* மார்ச் *19* தேதியிட்ட புனித அருள்சாதன நெறிமுறைகளுக்கொப்ப, மலேசியாவின் கத்தோலிக்க ஆயர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் (Appendix) குறிப்பிடப்பட்டுள்ள வழிபாட்டு நெறிமுறைகளைப் பின்பற்ற ஒப்புக் கொண்டுள்ளனர்.


அன்புள்ள இறைமக்களே, இந்த தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண நீங்கள் பொறுமையாக காத்திருந்து இறைவேண்டல்கள் செய்திருந்தாலும், இன்னும் சிறிது நேரம் காத்திருக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். கடவுளின் இரக்கத்திற்காகத் தொடர்ந்து மன்றாடுவோம், நம்முடைய பாவங்களுக்கு ஈடுசெய்வோம், நமக்காக மட்டுமல்ல இந்த தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர் களுக்கும், முன்னணியில் சேவையாற்றும் சுகாதார வல்லுநர்கள், பாதுகாப்புப் பணியாளர்கள், மற்றும் நமக்கான அத்தியவசியச் சேவைகளும் பொருள்கள் விநியோகமும் தொடர்ந்து கிடைப்பதை உறுதிப்படுத்தும் அனைவருக்காகவும் கடவுளின் தலையீட்டுக்காக மன்றாடுவோம்.

இந்த “கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு” பெருவிழா நாளான இன்று அன்னை மரியாவைப் போல் கடவுளின் நலன்களில் நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்வோம். உயிர்த்தெழுதலின் மாட்சியில் வாழும்படி நாம் நமக்குள் மரிக்க சவால் விடும் காலம் தவக்காலம்.

இன்றைய ஞாயிற்றுக்கிழமை நற்செய்தி வாசகம், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து லாசரஸை மரணத்திலிருந்து எழுப்பியதைப் பற்றி பேசுகையில், நாம் அவநம்பிக்கையில் சிக்காமல், மரணத்தால் மரணத்தை வென்ற அவரின் மீது நாம் திரும்பி வரும்போது அவநம்பிக்கையின் இருளை எதிர்ப்போம். ‘“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். உயிரோடு இருக்கும் போது என்னிடம் நம்பிக்கைகொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்.’ (யோவா *11:25*) என அவர் நமக்கு உறுதியளிக்கிறார்,

மலேசிய ஆயர்கள் பேரவையின் பேராயர்கள் மற்றும் ஆயர்கள் சார்பாக, உங்களுக்கு தூய புனித வார வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டவரின் ஆண்டான *2020* மார்ச் *25* ஆம் தேதி, கிறிஸ்துவின் பிறப்பு அறிவிப்பு பெருவிழாவான இன்று, இந்த மடலை வழங்குகிறேன்.



+ Most Reverend Julian Leow Beng Kim
President
Catholic Bishops Conference of Malaysia

+ Most Reverend Simon Poh, Archbishop of Kuching

+ Most Reverend John Wong, Archbishop of Kota Kinabalu

+ Rt Reverend Bernard Paul, Bishop of Malacca-Johore

+ Rt Reverend Cornelius Piong, Bishop of Keningau

+ Rt Reverend Sebastian Francis, Bishop of Penang

+ Rt Reverend Julius Dusin Gitom, Bishop of Sandakan

+ Rt Reverend Joseph Hii, Bishop of Sibu

+ Rt Reverend Richard Ng, Bishop of Miri

# பிற்சேர்க்கை

## புனித வாரக் கொண்டாட்டத்திற்கான திருவழிபாட்டு மற்றும் மேய்ப்புப்பணி விதிமுறைகள்

*A)* பாஸ்கா பெருவிழாவுக்கான நாள் இந்த ஆண்டு ஏப்ரல் 12 ஆம் தேதி ஆகும். வத்திக்கானின் ஆணை தெளிவுப்படுத்தியுள்ள படி, இந்த தேதியை மாற்ற முடியாது. ஏனெனில் இந்த பெருவிழா "முழு வழிபாட்டு ஆண்டிற்கு மையமாக உள்ளது."

*B)* எண்ணெய்கள் புனிதப்படுத்தும் மற்றும் அருள்பணியாளர்கள் தங்கள் குருத்துவ வாக்குறுதிகளைப் புதுப்பிக்கும் திருத்தைலத் திருப்பலி இந்த நடமாட்டக் கட்டுப்பாட்டு காலத்தின் முடிவில் அறிவிக்கப்படும் பிற்கால தேதிக்கு ஒத்திவைக்கப்படும்..

*C)* குருத்து ஞாயிறன்று குருத்தோலைகளை ஆசீர்வதிக்கத் தேவையில்லை.

*D)* **புனித வியாழன்:** பங்குத் தந்தை பாரம்பரியமாகப் பாதம் கழுவுவதோ அல்லது நற்கருணை மற்றொரு இடத்திற்கு இடம் மாற்றம் செய்யும் பவனியோ இல்லாமல் மாலை ஆண்டவரின் இரா உணவு திருப்பலியைக் கொண்டாட முடியும். மக்களின்றி திருப்பலி கொண்டாடும் அனுமதி அனைத்து அருள்பணியாளர்களுக்கும் விதிவிலக்கான முறையில் வழங்கப்படுகிறது. நற்கருணையானது நற்கருணை பேழைக்குள் மீண்டும் வைக்கப்பட வேண்டும்.

திருநிலைப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் பொதுநிலை சமூகத்தினர் அவரவர் இல்லங்களில் பொதுவான இறைவேண்டல்கள் செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர், அவற்றில் திருப்புகழ்மாலை அல்லது செபமாலை போன்றவற்றை இணைந்து செபிப்பதும் அடங்கும். மடங்களில் உள்ளவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பாதம் கழுவும் சடங்கை நிறைவேற்றலாம்.

*E)* **பெரிய வெள்ளி:** பேராலயங்கள் மற்றும் பங்கு ஆலயங்களில், ஆயர் அல்லது பங்குத் தந்தை ஆண்டவரின் திருப்பாடுகளைக் கொண்டாடுவார்கள். அகில உலகத்திற்கான மன்றாட்டில், நோய்வாய்ப்பட்ட வர்களுக்கு, இறந்தவர்களுக்கு, தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு அல்லது அச்சமுற்றோருக்கு ஒரு சிறப்பு மன்றாட்டு இருக்க வேண்டும் (cf Missale Romanum, pag.314 n. 13). உள்ளூர் சூழ்நிலைகளின்படி, அருள்பணியாளர் தனிப்பட்ட முறையில் திருச்சிலுவை ஆராதனை மேற்கொள்வதோடு, நற்கருணை ஏற்கலாம்.

F) **பாஸ்கா திருவிழிப்பு:** புதிய தீ ஆசீர்வதித்தல், பாஸ்கா மெழுகுவர்த்தி தயாரித்தல், ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும். பாஸ்கா மெழுகுவர்த்தி ஏற்றப்படும் ஆனால் பவனி இருக்காது. தொடர்ந்து பாஸ்கா புகழுரை இடம்பெறும். அடுத்து 'இறைவார்த்தை வழிபாட்டு நடைபெறும். "திருமுழுக்கு வழிபாட்டுக்கு", "திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பித்தல்" மட்டுமே போதுமானது.. (cf. Missale Romanum,, பக். 371, எண். 55). பின்னர் "நற்கருணை வழிபாடு தொடரும். பங்கு ஆலயத்தில் பாஸ்கா திருவிழிப்பில் கலந்துகொள்ளச் சாத்தியமில்லாதவர்கள் பாஸ்கா ஞாயிற்றுக்கான வாசகங்களில் முழுமையாகப் பங்கெடுக்க வேண்டும்.

G) முதியோருக்கான திருமுழுக்கு மற்றும் பெரியவர்களுக்கான உறுதிப்பூசுதல் சடங்குகள் வேறொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட வேண்டும். .

*H)* பொதுநிலையினர் திருப்புழ்மாலை இறைவேண்டலில் ஈடுபடவும், வழக்கமான பக்தி முயற்சிகளான – சிலுவைப் பாதை, நோன்பு, ஆன்மீக நற்கருணை வேண்டலில் இணைதல், இறை இரக்க செபமாலையில் பங்கெடுத்தல், நவநாள் மன்றாட்டுகளில் ஈடுபடுதல் போன்றவற்றில் பங்கெடுக்க ஊக்குவிக்கப் படுகிறார்கள்

*I)* இயலுமானால், பல்வேறு மாமறை/மறைமாவட்டங்கள் அனுதின திருப்பலிகளின் நேரடி ஒளிபரப்புகளை தொடர்ந்து வழங்கும். அருள்பணியாளர்கள் இயங்கலை (online) சமூக வலைத் தளங்கள், அல்லது இதர இயங்கலை ஊடகங்கள் வாயிலாக பங்கு மக்களோடு தொடர்பு கொண்டிருக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். பங்குகள், பணிக்குழுக்கள் மற்றும் அருள்பணியாளர்கள் ஆகியோருக்கு உதவி வழங்க பல்வேறு மாமறை / மறைமாவட்டங்களின் சமூக தொடர்பு பணிக்குழுக்கள் தயாராக உள்ளன.